Páliyar Nēsan — Jaffna
No. 9. September — 1866

E. P. Hastings

COLONIAL SECRETARY'S OFFICE
RECEIVED
SP 11
1866
COLOMBO



# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ம் ௵ புரட்டாசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். சங்கியை, ௯.

## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | சி. | க |
| ஒரேமுறையில் ௰ | " | " | " | ௬ |
| ௨௰ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௰ | " | " | " | ௪௰ |
| ௱ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS.
1866.

| | £ | s | d |
|---|---|---|---|
| Mr. S. Ponnampa'am. | | 4 | 0 |
| Mr. John Arumugam. | | 1 | 6 |
| Mr. M. Hitchcock. | | 1 | 0 |

## புரட்டாசிமாதம்.

இத்தமாதத்துக்கு இங்கிலிஷ்காரர் செப்தெம்பர் (September) என்பார்கள். முன் இது வருஷத்தின் முதல்மாதமாகக் கொண்டாடினார்கள். பங்குனியை முதல்மாதமாகக் கொண்டாடினபொழுது இது ஏழாம்மாதம். தற்காலத்தில் தையை முதல்மாதமாகக் கொண்டாடுவதால் ஒன்பதாம் மாதமென்னப்படுகிறது. இம்மாதத்தில் கனவு மிருதியென்று ஊர்க்கதையாகப் பேசுவார்கள். இறந்த பிதர்களுக்கு சைவர் பொதுச்சிரார்த்தமாக மாளயங்கொடுப்பார்கள். மாளயங் கொடுக்குமட்டுந் தங்கள் வீடுவாசல்களிற் சாணிப்போட்டு மெழுகார்கள். இம்மாதத்தின் அமாவாசிக்கடுத்த பிரதமை துவக்கி தசமிமட்டும் ஒன்பதுநாளாக துற்கை, இலக்குமி, சரச்சுவதி முதலிய சத்திகளைப் பூசிப்பார்கள். ஒரு அசுரனைத் துற்காதேவி ஒன்பதுநாளாக உபவாசித்து அசம்பண்ணையதால் அவளைப் பூசிக்கும்படி செய்வார்கள். கம்மியர், சத்திரியர் முதலியவர்கள் தங்கள் ஆயுதங்களுக்குப் பூசைசெய்வார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகள் தங்கள் ஏடுகளைக்கட்டி உவாத்தியார்வசம் ஒப்புவித்து பூசைசெய்வதுமன்றி ஒன்பதுநாளாக வீடுகள் தோறுஞ்சென்று விருத்தம்படித்து வசந்தனடித்து விளையாடிப் பணந்தண்டி உவாத்திமாருக்குக் கொடுப்பார்கள். தற்காலங்களில் கிறிஸ்துமார்க்கப் பள்ளிக்கூடங்களில் இவ்வழக்கமில்லை.

## உலகத்தின் ஏழு அதிசயங்கள்.

௨. காலிக்கனாசஸ் நகரில் ஆர்த்திமீசியாள் கட்டியிருந்த மாசோலேயம் என்னும் கோரி.

இக்காலத்திலே அலங்காரமுள்ள பென்னம் பெரிய கோரிகளை மாசோலேயம் என்பார்கள். முற்காலத்திலே காரியா (Caria) தேசத்து இராசனுக்கு சேமஸ்தானமாக அவன்பத்தினி ஆர்த்திமீசியாள் காலிக்கனாசஸ் நகரில் கட்டியிருந்த கோரிக்கு அவ்விராசன் நாமப்படி வழங்குஞ்சிறப்புப் பேராகவிருந்தது. அவன் மனைவி மிகு பிரஸ்தாபமாகக் கட்டிமுடித்ததால் அக்காலம் முதல் கட்டப்படும் மகத்தான எவ்வித சமாதிகளும் மாசோலேயம் எனப்படும்.

பிலினிமுதலான பூர்வீக சரித்திரகாரர் இந்த மாசோலேயம் என்னும்கோரியின் அளவுபிரமாணம் என்பவைகளைக்குறித்து எழுதியிருக்கிறார்கள். இது கி. மு. ௩௱௫௰௩ம வருஷத்தில் கட்டப்பட்டது. கெடுகாலின்பின் உண்டான பூமியதிர்ச்சியினால் அதிலுள்ள சிலபகுதிகள் அழிந்து விழுந்தது. அது கட்டப்பட்டு ஏறக்குறைய ௲௭௱ வருஷத்தின்பின் அதாவது கி. பி ௲௫௱௨௰ம் வருஷம் காலிக்கனாசஸ் நகரத்தைப் பிடித்தவர்கள் அந்தக் கோரியின் கட்டுக்கோப்புகளைக்கொண்டு ஒரு துருக்கம் கட்டினார்கள். அப்பால் துருக்கர் அந்த நகரத்தைப் பிடித்துக் காலிக்கனாசஸ என்னும் பெயரைமாற்றி வேறுநாமங் கொடுத்தார்கள். ஆனதினால் மகாமாசோலேயம் நின்ற இடமும் வரவரமறந்துவிட ஏதுவாயிற்று. பிலினியினது இதிகாசத்தைவாசித்தவர்கள் அந்தஸ்தலத்தை அறியப் பெருவாஞ்சைகொண்டு விடாப்பூட்டாகத் தேடி சொல்வீதத்தில் கண்டுபிடித்தார்கள்.

நியூத்தன் என்னுந் துரை அரிய பிரயாசத்துடன் அதின் திட்டமான இடத்தைத் தேடி ௲௮௱௫௬ம் ஆண்டு கண்டுபிடித்தார். உடைந்து துண்டுதுண்டாகக்கிடந்த பிரதிமைகளையும் தம்பங்களையுந் தேடிக் கிடைக்கத்தக்க துண்டுகளையெல்லாம் பத்திரமாய்க் கிண்டிக்கிளறி எடுத்து இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கிறார். அவ்விடத்திலுள்ள யுத்திசாலிகள் துண்டுகளை நுணுக்கமாய்ப் பொருத்தி பூரண பிரதிமைகளாக்கினார்கள். பொருத்தப்பட்ட உருவங்களில் அநேக உயரமுள்ளது மாசோலேயஸ்என்னும்இராசனின் பிரதிமையே. பின்னொன்று ஆர்த்திமீசியாளுடையது. இவைகளன்றிச் சிங்கம், குதிரை முதலிய பிரதிமைகளும் எடுக்கப்பட்டன. இவைகளிற் கொத்துவேலைகள் நேர்த்தியிருந்தன. இன்னும் அம் அடிநீளம் கம அடி உயரமுள்ள கொத்துவேலை செய்யப்பட்ட ஒரு சுவரின் பட்டையுள்ள பல பகுதிகள் காணப்பட்டது.

அந்தக்கோரி பக்கத்துக்கு ௩௱௫௰ அடியுள்ளதாகச் சதுரவடிவாயிருந்தது. இச்சதுரத்தின் நடுவில் மாசோலேயம் இருந்தது. இதின் அஸ்திபாரம் ௨௬ அடிநீளமும் ௭௭ அடி அகலமுமுள்ளது. அந்த ஆதாரத்தின்மீது கோரிகட்டப்பட்ட விதமாவது; முதன்முதல் ௱௨ அடிநீளமும் ௯௯ அடிஅகலமும் ௬௫ அடி உயரமுமுள்ளதாய் அடித்தளமிட்டு வெளிப்புறங்களின்மேல் மேற்சொன்ன சித்திரப்பட்டையுள்ள பலகைபதித்து அலங்கரித்திருந்தது. இவ்வடிவான தளத்தின்மேல் ௯௯ அடி நீளத்தில் ௬௯ அடி அகலத்தில் ௯௰ அடி உயரத்தில் ஒரு கோவில் கட்டியிருந்தது. ௩௬ தூண்கள் மூலைக்குமூலை செடியபக்கத்துக்கு ௯ம் சிறிய பக்கத்துக்கு ௭ம் ஆக நிறுத்தப்பட்டிருந்தது. இக்கோரியின்மேல் கோவில் உயரத்துக்குச் சமமாக ௯௰ அடிஉயரத்தில் பலபுச[...]யெ பிரமிட் (Pyramid) இருந்தது. நியூத்தன் என்பவர் இரண்டுமூன்று அடி அகலத்தில் ஏறக்குறைய ஒருஅடி உயரத்திலுள்ள அநேக வெண்கலஓடுகள் எடுத்தார். ஒவ்வொரு ஓட்டின் மேற்பக்கத்தில் ஒரு துவாரமும் கீழ்ப்புறத்தில் அதற்கொத்த ஒரு குமிழியுமிருந்தது. பிலினி என்பவர் குறித்துக்காட்டியிருக்கிற ௩௰ அடிப்பரப்பையும் நிறைக்க இம்மாதிரி ௭௪ ஓடுகளும் விக்கிரகங்களும் கோபுரத்தின் சிகரத்துக்கு வேண்டியவைகளும் மட்டுக்குமட்டாய் இருந்திருக்கும். இதைக்கொண்டு, இந்த வெண்கல ஓடுகள் பிரமிட் என்னுங் கோபுரத்தின் இடிதலில் தப்பி மீதியானவைதானென்று உத்தேசிக்கலாம்.

இப்படியே மாசோலேயம் பூரண அந்தரத்துடன் அறியப்பட்டாயிற்று. கண்டெடுக்கப்பட்டவையெல்லாம் இப்போது பிரித்திஷ்மியூசியம் (British Museum) என்னும் பலபொருட் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. கண்டபின்மட்டுக்கு கிரமனித்துப்பார்க்கையில் மாசோலேயம் என்னும்கோரி உச்சிதவிநோதமும் அலங்காரமுமுள்ள கட்டிடமாயிருக்கிறது.

ஆர்த்திமீசியாள் மேற்சொல்லிய மாசோலேயத்தைக் கட்டவே மகா அலெக்ஸாந்தரும் பாபிலோனில் ஒன்றைக் கட்டினான். மற்றுஞ்சில பெரியோர் மகாமாசோலேயங்கள் என்னும் வேறே கோரிகளையும் கட்டியிருக்கிறார்கள். இங்கிலாந்து தேசத்து நமது இராணிசாயவியாரவர்களும் காலஞ்சென்ற தமது நாயகராகிய அல்வேட் (Albert) பிரபுவுக்கு ஞாபகஸ்தானமாக ஒன்றைக் கட்டியிருக்கிறது.

இவ்வகைக் கட்டிடங்கள் உயிரற்ற உடலுக்கென்று கட்டப்பட்ட வீடுகளாயிருக்க, அந்த உயிருக்கு நாம் ஒருவீட்டைச் சம்பாதிக்குதல் எவ்வளவு அவசியம். சரீரத்திலும் ஆத்துமா மகா மேன்மையுள்ளதானதால் சரீரத்துக்காகக் கட்டும் வீட்டிலும் ஆத்துமாவுக்காகத் தேடும் வீடு மிகவுஞ் சிறந்ததாயிருக்கவேண்டும். "பரமண்டலங்களில் கையால் செய்யப்படாமல் தேவனால் உண்டாக்கப்பட்ட நித்தியமான வீடாகிய வாசஸ்தலம் நமக்குண்டு."

## போக்கிஷம்.

பொக்கிஷமாவதின்னதென்று பிள்ளைகளே தெரியுமா? உலகத்தார், வெள்ளி, பொன், முத்து, மாணிக்கம் முதலியவைகளைப் பொக்கிஷம் என்பார்கள். சரி, இவைகள் அழிந்துபோம், கள்ளர் அபகரிப்பார்கள், பூச்சி முதலியவைகள் கெடுத்துப்போடும். ஆகையால் [...]ர் இந்தப் பொக்கிஷங்களைத் [...] என்றும் மறமைக்குரிய [...] டவேண்டுமென்று [...] அப்பொ[...]



## காண்டாமிருகம்.

நமது தேசத்தாரில் எவராகுதல் காண்டாமிருகத்தைக் கண்டிரார்கள். மூக்குக்கு மேல் ஒரு கொம்பையுடைய மிருகம் இதுவேயன்றிப் பின்னென்றில்லையென்று நம்புகிறோம். அவ்விதமாகக் கொம்பிருப்பதற்குத் தகுந்த நியாயமுண்டு. அது காடுகளுக்கு ஊடாகச் செல்லுகையில் மரங்கள் செடிகளைக் கிழித்து வெருவாகப் போகும். தனது ஆகாரத்திற்கு தன் கொம்பினால் வேர்களைக் கிளறிக் கிண்டிச் சாப்பிடும். இன்னும் யானையோடெதிர்த்துச் சண்டைபண்ணுங் காலத்தில் அதின் விலாவில் தன்கொம்பால் தாக்கிக் காயமுண்டாக்கும். இவ்விதமாக அதின்கொம்பு ஒரு குந்தாலியாகவும் ஒரு ஈட்டியாகவுமிருக்கின்றது. தன் உணவைத் தேடுவதற்குந் தன்னைக் காப்பதற்குந் தகுந்ததாயிருக்கிறது. அதின் மூக்கின்மேற் கொம்பிருக்கப்படாதென்று சொல்பவனார்.

ஒரு கொம்பிருப்பது நல்லது, இரண்டிருக்கால் அதிகம் நல்லது. இரண்டு கொம்புள்ள காண்டாமிருகமுமுண்டு. ஆபிரிக்காவில் இரண்டு கொம்புள்ளவை மிகுதியாகவிருக்கிறது. அவை பன்னிரண்டடி நீளமுள்ளன. அவைகள் அதி பெலமுள்ளவைகள். இந்த தேசத்திலுள்ளவை ஒற்றைக்கொம்புள்ளவைகள். இவை ஆறு எழு அடி நீளமுள்ளவைகள். யானையை நீக்கினால் காண்டாமிருகமே பெருமிருகமென்று சொல்லலாம்.

இந்தியாவில் காண்டாமிருகவேட்டை அதிபிரபலமாயிருக்கின்றது. யானைமேற் சனங்களேறி ஐந்தாறை ஒரு கூட்டமாகக் கலைப்பார்கள். அவைகளின் தோல் மிகவுந் தடித்திருப்பதால் கொல்வது வருத்தம். சில காலங்களில் ௨௰ குண்டுபட்டும் விழாது. காண்டாமிருகம் பயமின்றி யானையைச் சருவி தன் கொம்பை அதின் சடத்திற் செலுத்தி இரண்டாகக் கிழிக்கும். யானை தனக்கு நேரிடுவதின்னதென்று மட்டிட்டு தன் வாற்பக்கத்தைக் காண்டாமிருகத்துக்குக் காட்டி ஒரு தள்ளுத்தள்ளி தன் முழந்தாட்களுக்கிடையில் அதை அகப்படுத்தும். அப்பொழுது யானைமீதிருப்போர் தங்கள் குண்டுகளை இறக்கிச் சுட்டுத் தோலைப் பிளப்பார்கள்.

இவ்வகையே பலதரமுஞ் சுட்டு அநேகமோசங்களுக்குள்ளாகி தங்கள் சிவனும் அங்கோவிங்கோவென்பதாக தங்கள் பெலனெல்லாவற்றையும் இழந்து சில வேளைகளிற் கைகூடாமற் போய்விடுவார்கள். சிலவேளைகளில் வாய்த்தால் வேட்டைக்களத்தில் ஒரு செயத்தம்பம் நாட்டுவார்கள்.

காண்டாமிருகம் பயிர்வகைகளையும் புல்பூண்டு முதலியவைகளையுமாத்திரமே உணவாகக் கொள்ளும். தண்ணீருக்குச் சமீபத்தில் வசிக்கும். சேற்றில் புரளும். மனுஷருக்குமெத்தப் பயப்படும். கண் கூர்மையில்லாதிருந்தும் மணத்தினாலுங் கேள்வியினாலுந் தனது சத்துருக்களை மட்டிட்டறியும். அதை வேட்டையாடும்படி போகிறவர்களுடன் எதிர்த்துப் பயமில்லாமற் சண்டைசெய்யும். அது மூர்க்கமாயிருக்கையில் அமர்த்துவது வருத்தம்.

## சேபமும் கரடிநகமும்.

ஒரு குருவானவருடன் அன்பாயிருந்த ஒரு சிறு பிள்ளை அந்தக் குருவானவர் போகவேண்டியிருந்த தேசத்தில் பொல்லாத கரடிகளுண்டு என்றும் பிரயாணிகளை அவைகள் நாசப்படுத்துகிறதென்றும் கேள்விப்பட்டிருந்தான். ஒரு நாள் அந்தப் பிள்ளை குருவானவரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு நீர் பரதேசகுருவாகப் போகப்படாது என்று சொன்னான். ஏன் அப்படிச் சொல்லுகிறாயென்று கேட்க, கரடிகள் உம்மைக் கொன்றுதின்றுவிடும், ஆகையால் போகப்படாதென்றான். அப்படியல்ல, நான்போகவேண்டும், தேவன்என்னை அழைக்கிறார், அவரை நம்பவேண்டும், நான் பயப்படப்படாது. அவர் என்னைக் காப்பாற்றக்கூடும். கரடிக[illegible] தேவன் என்னை விலக்கும்படி நீ செப[illegible]வேண்டும். அப்படிச் செபம்பண்ணு[illegible]

[illegible] என்று சொல்லி அந்தி [illegible] முடிக்கையில் எப் [illegible]மாகில்

ஒருநாள் இந்தக்குருவானவர் மறுபேருடன் கூடித் தமது தொழிலைச் செய்துவருகிறகாலத்தில் ஒரு கரடி இவர்களுக்கு நேரிட்டது. அவர்களில் ஒருவர் கரடிக்குச் சுட, அது சாகாமல் காயப்பட்டு மிகு மூர்க்கத்துடன் இந்தக் குருவானவரிற் பாய்ந்து அவரைப் பிடிக்க, பின்னொருவர் அவ்வேளையிற் கரடிக்குச் சுட அது விழுந்திறந்தது. அவ்வேளையிற் குருவானவர் சிறுபிள்ளையின் செபத்தை நினைத்து அதின் நகங்களிலொன்றை வெட்டி தனது செனனதேசத்துக்கு அனுப்பினார். அது இப்பொழுது நடந்த வர்த்தமானத்துடன் எழுதப்பட்டு ஒரு வெள்ளித்தட்டத்துக்குள் வைத்திருக்கின்றது. அந்தச் சமுசாரத்தார் செபத்தின் வல்லமை எவ்வளவென்று நினைக்கும்பொருட்டு அதை ஒரு ஞாபகக்குறியாக வைத்திருக்கிறார்கள்.

செபத்தினால் உண்டாகும் பலனைக் கண்டீர்களா? ஒரு பிள்ளை விடாப்பூட்டாகப்பண்ணிய செபத்தால் ஒரு குரு கரடிக்குத் தப்பினார். செபத்தினாலாகும் பலன்களைப்பற்றி அநேக திட்டாந்தங்கள்வேதத்திலுண்டு. செபம் கூரியக[illegible]கமும்நல்லகேடகமும்பரிசையுமாயிருக்கின்[illegible]பத்தைஎப்பொழுதுங் கையாளுங்கள்.

## மோறாப்பை.

ஒரு ஐசுவரியவான் ஆயிரம் மோறாவையும் இரத்தினக்கற்கள் பதித்திருந்ததுமான ஒருபொற்பாம்பையும் அடக்கிய ஒருபையை இழந்துவிட்டான். அதை ஆராகுதல் கண்டெடுத்துக் கொடுத்தால் நூறுமோறா உபகாரமாகக் கொடுக்கப்படுமென்று பிரசித்தம்பண்ணினான். ஆனால் ஒரு வறியமனுஷன் அதைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டுபோய் தான் எடுத்தவிதத்தையும் பொருட்காரன்பண்ணின பிரசித்தத்தையுஞ் சொன்னான். அதற்கு அவன் மனைவி தேவன் நமக்குக் கொடுத்ததை நாமேன் கொடுப்பான். இதை வைத்துக்கொண்டு நாங்கள் சீமான்களாக விருக்கலாம் என்றாள். அப்பொழுது புருஷன் அப்படியல்ல. அது நமதுபணமல்ல, நமக்கு ஒரு நயமும் அதினாலுண்டாகமாட்டாது. நாம் நாணயமுள்ளவர்களாக விருப்பதே நற்கீர்த்தி, அது நமக்குப் போதுமென்று சொல்லிப் பணத்தையும் பாம்பையும் எடுத்துக்கொண்டு ஐசுவரியவானிடம்போய் உமதுபொருள்களை ஏற்றுக்கொண்டு நீர் எனக்குத்தரவேண்டிய பணத்தைத் தாருமென்றான். ஆனால்

காணபத்தப்பிலியாகிய அந்த ஐசுவரியவான் அவனுக்கு பாசாமொன்றுங் கொடுக்க மனமில்லாமல் பையை அவிழ்த்து தனது பொருள்கள் சரியாகவிருக்கிறதோவெனப்பார்ப்பதுபோற் பார்த்து என் பைக்குள் இரண்டு பொற்பாம்புவைத்தேன் ஒன்றிருக்கிறது மற்றதைக் காணவில்லை என்று சொன்னான்.

இதைக்கேட்டவுடன் தரித்திரன் சஞ்சலிபமானான். அவ்விடத்திலுள்ள மற்றும் பணக்காரரெல்லாரும் ஐசுவரியவானோடே சேர்ந்துகொண்டார்கள். தரித்திரனைக் கள்ளனென்று குற்றஞ்சாற்றினார்கள். அவனை நீதிஸ்தலத்திற்கு அழைத்து இராசாவின் சமுகத்தில் நிறுத்தினார்கள். இராசா ஒரு தந்திரயுத்தியுள்ள ஒருவனை அழைப்பித்து இதுகாரியத்தை விளங்கும்படி கட்டளையிட்டார். ஐசுவரியவானும் தன் முறைப்பாட்டைச்சொல்ல, வறியவனும் உண்மையான சத்தியத்துடன் தான் அந்தப் பையிலிருந்தொன்றையும் எடுக்கவில்லையென்று உறுதிப்படுபண்ணினான்.

இருபகுதியாரையும் விளங்கினதின்மேல் தந்திரயுத்திக்காரன் பின்வருந் தீர்ப்பைச் சொன்னான். எப்படியெனில், ஐசுவரியவானோ தப்பிலியல்ல, அவர் யோக்கியன், அவர் கீர்த்தி காணயத்தைப்பற்றிச் சற்றும் ஐயப்படமாட்டோம். அவர் சொல்லுகிறபடி இரண்டு பொற்பாம்பும் ஆயிரம்மோருவும் உண்மையாயிருக்கவேணடும். தன்னுடையதல்லாததை அவர் ஒருபொழுதுங் கேட்கமாட்டார். இரண்டு பாம்புள்ள ஒருபை தன்னுடையதென்கிறார். இந்தப்பையில் ஒருபாம்புமாத்திரமிருக்கிறது. ஆகையால் இது அவருடையதல்ல. அப்படிப்பட்ட பையை எடுத்தர் தருவோருக்கு இனும் கொடுப்பேனென்று பிரசித்தம்பண்ணட்டும். நமக்கு முன்னிருக்கிற பைக்கு உடையவனேக்காணேன். அது முழுவதும் வறியவனே உனக்கு உரித்து. இப்பையுடையவன் வருமட்டுக்கும் நீயே அதை வைத்துக்கொள். ஆனால் உனது உத்தமதையையும் காணயத்தையுங் காட்டினவனுக்கு பிரசித்தம்பண்ணப்பட்ட நூறுமோருவையும் ஐசுவரியவான் தரட்டும். இதுவே நீதியென்று தந்திரயுத்திக்காரன் சொன்னான். இத்தீர்ப்பை இராசாவும் அவ்விடத்திலிருந்த சகலரும் சரியான தீர்ப்பென்றுஒத்துக்கொணடார்கள்.

பிள்ளைகளே, இக்கதை நற் படிப்பினையைக் காட்டுகிறது. உத்தமராக காணயமாக நடப்போர் தங்கள் பலனை அடைவதுமன்றி அவர்கள்பேர் எப்பொழுதும் பிரசாசித்துக்கொண்டேயிருக்கும். கன ஆசை கோடி தரித்திரமென்றதுபோற் தன் பொருளுக்கு மேற்பட ஆசைப்பட்டவன் தன் பொருளையும் இழந்து தன்கையிலிருந்த முதலையும் இழக்க ஏதுவாயிற்று. எவ்விதத்திலும் உண்மையைப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

## அற்பகாரியங்களுக்காகவுந் தேவனைநம்பு.

பிள்ளைகள் தங்கள் வஸ்திரங்களுக்காகுதல் தாங்கள் குடியிருப்பதற்கு ஒரு வீடு வேண்டும் என்றாகுதல் கூவென்று அழுவதைக் காணோம். அவர்கள் இனிப்பு பண்ணிகாரம் முதலியவைகளுக்கு அழுவது போலவே வளர்ந்தோரும் பெருங் காரியங்களைக் குறித்துக் கூக்குரல்பண்ணாமல் அற்பகாரியங்களைக் குறித்துக் கூக்குரலிடுகிறார்கள். பெருங் காரியங்களுக்குத் தேவனை நம்புவதுபோல அற்பகாரியங்களுக்காகவுந் தேவனை நம்புவதற்குத் தடையென்ன? உலகத்தை ஆளுகிறவர் அணுக்களை ஆளுகிறாரென்றும் கழுகுக்குப் புசிப்பூட்டுகிறவர் ஈகளுக்குப் போசனங்கொடுக்கிறாரென்றும், நட்சத்திரங்களைத் தொகைப்படுத்துகிறவர் நமது தலைமயிர்களையுந் தொகைப்படுத்துகிறார் என்றும் நினையுங்கள். சகலத்தையுந் தாங்குகிறவர் உங்களைத் தாங்கமாட்டாரா? லீலியப்புஷ்பங்களை அலங்கரித்துக் காகங்களை உணவூட்டுகிறவர் உங்களுக்கு அன்னவஸ்திரந் தரமாட்டாரா? ஆ! அற்ப விசுவாசிகளாகிய சிநேகிதர்களே, வாடிப்போகாத கிரீடத்தைத் தரவிருக்கிறவர் அழிந்துபோகும் அப்பத்துண்டைத் தரமாட்டாரென்று எண்ணுகிறீர்கள். இரட்சிப்பின் வஸ்திரத்தாலுங்களை உடுத்தவர் உங்கள் சரீரத்துக்கு வேண்டிய வஸ்திரந் தாராரா? மோட்சத்தில் தேவன் தாமே கட்டி முடித்திருக்கும் அந்திபாரமுள்ள வாசஸ்தலத்தை தரவிருக்கிறவர் இவ்வுலக வனாந்தரத்தில் உங்கள் சரீரத்துக்கு ஒரு குடிசை தரமாட்டாரா? தம்மையும் தமது குமாரனையும் தமது ஆவியையும் வாக்கையும் கிருபைகளையும் வாக்குத்தத்தங்களையும் ஒப்புக்கொடுத்தவர் உங்களுக்கு வேண்டிய ஆகாரத்தையும் வஸ்திரத்தையும் சிநேகிதரையும் வீட்டையும் இச்சீவியத்துக்கு அவசரந் தேவையான யாவற்றையுங் கொடுக்கமாட்டாரென்று எண்ணுகிறீர்கள். பெரிய காரியங்களைக் கொடுத்தவர் சிறியகாரியங்களைக் கொடாரா. இதுகாரியத்தைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கேளுங்கள். "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்பித்திருக்க, அவரோடே மற்றெல்லாவற்றையும் அவர் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" ஆகையால் எல்லாவற்றிலுந் தேவனை நம்புங்கள்.



ஏசாயா ௧௧: ௬—௯.

மேலேகாணப்படும் படத்தை, பிள்ளைகளே, உற்றுப்பாருங்கள். ஒரு சிறுபையனும், ஒரு சிங்கமும், கோனும், ஆட்டுக்குட்டியும், சிவிங்கியும், ஒரு பசுவும் நிற்கின்றன. துஷ்டமிருகங்களும் நல்லமிருகங்களும் கலந்துநிற்கின்றன. விளைமிருகங்களுடன் ஒருபையனும் நிற்கிறான். கட்டுக்காவலின்றி இப்படிநிற்பதுகூடாது. சிங்கத்தின் தன்மையையும் கோனின் தன்மையையும் சிவிங்கியின் தன்மையையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆடு மாடு சாதுவானமிருகம். இப்படி எல்லாம் ஒருஇடத்தில்நிற்றல் ஆச்சரியமாயிருக்கும். அப்படிப்பட்டகாலம் ஒன்றுண்டென்று வேதந்தெளிவாகச்சொல்லுகிறது. வேதத்தை நீங்கள் நம்புகிறீர்கள். ஆகையால் இதுகாரியத்தையும் நம்புவீர்களென்று எண்ணுகிறோம்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனம் ௧௧ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அதிற் சொல்லியிருக்கிறதாவது, "கோனும் ஆட்டுக்குட்டியோடே தங்கும், சிவிங்கி வெள்ளாட்டுக்குட்டியோடே படுக்கும், கன்றும், சிங்கக்குட்டியும், புஷ்டியான மிருகமும் ஏகமாய்க் கூடும்; ஒரு சிறுபாலன் அவைகளை நடத்துவான். பசுவுங் கரடியுங் கூடிமேயும்; அவைகளின் குட்டிகள் ஏகமாய்ப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாடுபோல வைக்கோல்தின்னும், முலைகுடிக்குங் குழந்தை விரியன்பாம்பின் வளையின்மேல் விளையாடும், முலைமறந்த பிள்ளை கட்டுவிரியன்புற்றிலே கையை வைக்கும். கடலானது தீர்களினால் நிறைந்திருக்கிறதுபோலப் பூமியெகோவாவைப்பற்றும் அறிவினால் நிறைந்திருக்கும்: ஆதலாற் பரிசுத்தம்பொருந்திய என் மலையெங்கும் தீமையாவது, நாசமாவதுசெய்வார் ஒருவருமில்லை"

கிறிஸ்துவின் காலத்தில் பூமி மாறுதலடையும். துஷ்டர் நல்லவர்களாவார்கள். நல்லவர்களுக்கு துஷ்டரும் பயமின்றி ஒருமித்து வாழுவார்கள். தேசத்தில் கிஷ்டோஞ்செய்வார் ஒருவருமிரார்கள். எல்லாரும் அன்னியவொன்னிய ஐக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். பிள்ளைகளே, அப்படிப்பட்டகாலஞ் சீக்கிரம் வரும்படி நீங்களுங்கள் தேவனிடத்திற் பிரார்த்தியுங்கள். இந்தக்காலத்தை அபேட்சித்து அனேக[illegible]ர்கள் தங்கள் நாள்வீதச்செபங்களில் ஆவலுடன் வேண்டுதல்பண்ணுகிறார்கள்.

## முயற்களங்கம்.

சந்திரனிற் காணப்படுங்களங்கமின்னதென்றறிவீர்களா அதை இவ்வூரார் ஔவையார்க்கிழவியென்றும் முயற்களங்கமென்றுஞ் சொல்லுவார்கள். அது அப்படியல்லவென்று தூரதிருஷ்டிக்கண்ணாடியால் வானசாஸ்திரிகள் கண்டிருக்கிறார்கள். அதிற் காணப்படுவது மலைகளென்றும் அம்மலைகளின் சிகரத்தின் உயரங்களையும் கணித்திருக்கிறார்கள். அது மெய்யோவென்றறியும்படி தூரதிருஷ்டிவைத்திருப்போரிடங் கேட்டு [illegible]பாருங்கள்.

முயற்களங்கமென்று சொல்லுவதற்குக் காரணமின்னதென்று இவ்விடத்தில் விளக்கப்பண்ணுகிறேன். சுவாமியவர் சகலத்தையும் படைத்தபின்மேல் தன் செய்கைகள் எப்படியென்று பார்க்கும்படி பூமியிற் தோன்றினாராம். மிருகசாதிகளை அழைத்துத் தனக்குப் போசனங்கேட்டவிடத்தில் ஒரு நரியும் ஒரு குரங்கும் ஒரு முயலும் அவர் கட்டளைக்குக் கீழமைந்துபோசனந்தேடும்படிபோயின. நரியானது ஆற்றங்கரையருகில் மௌனமாக விழிப்புடன் உட்கார்ந்திருந்து அகப்படக்கூடிய மீன்களெல்லாவற்றையும் பிடித்துக்கொண்டுபோனது. குரங்கு மரங்களில் தேடி நல்லகனிவகைகளைப் பிடுங்கிக்கொண்டுபோனது. ஆனால் முயல் என்னசெய்தது. அங்குமிங்கும் ஓடி ஒன்றுமில்லாமல் திரும்பிவந்தது. மீனிருக்கிறது காய்கனிகளுமிருக்கிறது. நான் என்னசெய்வதென்று முயல் நினைந்து கல்லுக்களை அடுக்கிப் பலிபீடமாகச்செய்து விறகை அதிலிட்டு நெருப்பை மூட்டித் தன்னைத்தானே பலியாக்கும்படி அதில் விழுந்து தானம்பண்ணினது. தம்பிரான் இதைக்கண்டு முயலின்நோக்கத்தையும் அன்பையுங் கண்டு அதின்பேரில் அனுக்கிரகங்கொண்டு தன்கையெட்டி அதை எடுத்து அதிககுளிர்ச்சியுள்ள சந்திரனில் வைத்தாராம். இதுவே முயற்களங்கமென்றதற்குக் காரணம்.

பிள்ளைகளே கதை உண்மையில்லாதிருந்தும் நற்படிப்பினை இதிலுண்டு. எங்கள் இரட்சகருக்கு சிலர் உச்சிதகாணிக்கைகளைக் கொடுக்கலாம், கோயில்களைக் கட்டுவதற்கும் பரதேசத்துக்குப் போதகர்களை அனுப்புவதற்கும் ஏராளமான திரவியத்தைக்கொடுக்கலாம். கல்விப்பிரசங்கம்பண்ணலாம். புத்தகங்களை எழுதலாம். ஆகில் நாம் என்னத்தைக்கொடுப்போம். "வெள்ளியும்பொனனும்எங்களிடத்திலில்லை." நாங்கள் பேச எழுதத்திராணியில்லை என்பீர்களாகும். ஆனால் நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்கலாம். அதைச் செய்வதற்கு அக்கினியிற்செல்லுவதுபோல் சிலவேளை இருக்கும். எங்கள் நண்பர் எங்களை வெறுத்துத் துன்பப்படுத்துவார்கள். அவர் நாமத்தினிமித்தம் உபத்திரவத்தையடைவதுபோல வேறொன்றும் அதிக இன்பமாயிராது. மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவனெவனோ அவனை மனுபுத்திரனுந் தேவனுடைய தூதர்களின்முன்பாக அறிக்கைபண்ணுவான் என்று சொல்லியிருப்பதால் முயல் தன்னைத் தானபலியாக்கினதுபோல உங்களுக்கும் நேரிட்டால் அப்படிச் செய்யுங்கள்.

வெட்கம் துக்கமின்றி சான்றுரைப்பவருடனும் உங்கள் இரட்சகரின் பெருமையையும் மாட்சிமையையும் எடுத்துப்பேசுங்கள். அவர் இராச்சியம் பூமியில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்ற ஆசையைப் பயமின்றி உங்கள் மனதிலிருப்பதைக்காட்டுங்கள். அவர் தம்மைத்தாமே உங்களுக்காகப் பலிசெலுத்தினதால் நீங்கள் யாதொன்றையும் மறைத்துவையாமல் உங்களையும் உங்களுக்குள்ளதெல்லாவற்றையும் பலிசெலுத்துங்கள்.

C. M.

## வைகறைவிண்ணப்பம்.

௧. ஆதித்தன் காலம் அளவே
கற்பித்த தேவன் நீர்
யாருக்குஞ் சோதி காணவே
இத்தன்மையைத் தந்தீர்.

௨. கீழ்த்திசை தோன்றி, வேகமாய்
மேற்றிசை செல்லவே
நில்லாமல் யார்க்கும் பகலாய்
தன் வழி ஓடுமே.

௩. அவ்வண்ணம் கண்டென்னேரமும்
நிற்பேன் என் வேலையில்,
வைகறைதொட்டு சந்தியும
விடேன் வீண்காலத்தில்.

௪. கர்த்தாவே, உமதாவியால்
நிரப்பும் தயவாய்,
மெஞ்ஞானந் தந்த அன்பினால்
நோக்கும் பூர்த்தியாய்.

௫. சீவன் இருக்கும் அளவில்
மெய்ப்பத்தியை விடேன்
மரித்து யேசு மடியில்
நல்லாறல் அடைவேன்.

## சத்தியவேதக்கேள்வி.

௮ம் பாடம்.

மறுபிறப்பு. யோவா. ௩: ௧–௰.

௧. யேசுவிடம் வந்ததார்?

௨. அவன் ஆர்? பரிசேயனும் பெரியசங்கத்தில் ஒருவனுமாயிருந்தான்.

௩. பெரிய சங்கமாவதென்ன? எழுபத்திரண்டுபேர்கூடிய யூதருடைய கவ்வைகாரியங்களை விசாரிக்கிறசங்கம்.

௪. எப்பொழுது கிறிஸ்துவிடம் போனான்?

௫. ஏன் அப்படிப் போனான்? யெசுவின் சிஷனென்று தன்னை ஒருவரும் அறியாதபடிக்கு.

௬. நிக்கோதேமு கிறிஸ்துவுக்கு என்னசொன்னான்?

௭. யேசு அதற்கு என்னமறுமொழி சொன்னார்?

௮. அவர் சொன்னதை நிக்கோதேமு விளங்கினானா?

௯. மறுபடி பிறக்கிறதாவதென்ன?

௰. மறுபிறப்படையமுன் இருதயத்தின்சீரென்ன? எரே. ௰௭: ௯; மாற். ௭: ௨௧, ௨௨.

௰௧. மறுபிறப்பின்பிறகு இருதயத்தின் சீரென்ன? எசே. ௩௬: ௨௬, ௨௭; கலா. ௫: ௨௨, ௨௩.

௰௨. திரும்பவும் யேசு எவ்விதமாக நிக்கோதேமுக்கு உபதேசித்தார்?

௰௩. தண்ணீராற் பிறக்கிறதென்ன? ஞானஸ்நானம்பெறுவது.

௰௪. ஆவியினாற் பிறக்கிறதென்ன? முன் சொல்லியபடி இருதயம் மாறுதலே.

௰௫. கடைசியாக நிக்கோதேமு யேசுவை விளங்கி அவரை நம்பினானா? ஆம் அவருடைய குற்றம் விளங்கப்பட்ட இடத்தில் அவருக்குப் பாதுகாப்பாகப் பேசினதினாலும் அவருடைய பிரேதசேமத்துக்கு உதவி செய்ததினாலும் அவரை விசுவாசித்தானென்று நம்ப இடமுண்டு.

---

ஐயாவே,

நேசனின் கடைசிச் சங்கியையில் "காகங்களின் நீதிஸ்தலம்" என்பது. நான் என் கண்ணாரக்கண்ட இரண்டு சிறு காரியங்களை நேசனுக்கும் அதின் நேசருக்கும் அறிவிக்க எவிற்று. அவைகளால் காகங்களுக்குள்ளிருப்பது போலவே எறும்புகளுக்குள்ளும் நீதிஸ்தலங்களுண்டென்றும் குற்றவாளிகளான எறும்புகள் அதினதின் குற்றத்திற்குத் தக்கதாக தண்டிக்கப்படுகிறதாகவும் விளங்கும்.

எப்படியெனில் ஒருமுறை ஒரு வீட்டின் தலைவாசலிலுள்ள எறும்பு புற்று ஒன்றை அதிதிட்பமாய்ப் பார்த்து முகப்பாதிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அந்தப் புற்றைவிட்டு மூன்று எறும்புகள் ஒன்றின்பின்னொன்றாகச் சற்றுத்தூரம்போகக் கண்டேன். போய் நடுவிற் போன எறும்பை மற்ற இரண்டும் பிடித்து அது வில்லங்கமாய் நுழையக்கூடிய ஒரு சிறு வெடிப்புக்குள் நுழைத்துவிட்டன. நுழைக்கப்பட்ட எறும்பு மெத்தச் சுறுக்கில் வெளிக்கிட்டு ஓடத்துவங்கினது. அப்பொழுது மற்ற இரண்டும் அதின் பிறகேபோய் திரும்பவும் கொண்டுவந்து முன்போலவே நுழைத்தன. இப்படியே இரண்டுமூன்றுமுறை செய்தும் வாயாதபடியால் அந்தத் தனியெறும்பு புற்றுக்கே தப்பியோடிவிட்டது. சற்றுப்பொறுத்துப் புற்றுக்குள்ளிருந்து நாலைந்து எறும்புகள் வெளிக்கிட்டன. அவைகளிலொன்று பெரிய தலையுள்ளதாய் அவைகளின் தலைவனாகக் காணப்பட்டு மற்றவைக்கு முன் சென்றது. எல்லாம் கூடி முந்தின வெடிப்பண்டைக்கே ஓடிப்போய் அந்தப் பெரிய எறும்பு அவைகளில் ஒன்றைப்பிடித்து மெத்தப் பெலமாய் வெடிப்புக்குள் நுழைத்தது நுழைக்கப்பட்ட எறும்பு மறுபடி ஒருக்காலும் வெளிக்கிடவில்லை.

வேறொருமுறை முன் சொல்லியவிடத்திலேயே வேறொரு வீரமான எறும்பின் புற்றைக்கவனித்தபோது நாலு எறும்பு கூடி வேறொரு எறும்பைக் கூட்டிக்கொண்டு புற்றுக்குச் சற்றப்பால் போய் அந்தத் தனியெறும்பை நடுவில் நிறுத்தி நாலும் நாலுபக்கத்திலும் நின்றுகொண்டு ஒன்று தலையிலும் ஒன்று வாலிலும் மற்ற இரண்டும் இரண்டு பக்கங்களிலும் வலுவாய் கடித்து அதைத்துண்டித்தெறிந்துவிட்டுப் போய்விட்டன.

இப்படியே மனிதரிலும் காகங்களிலும் எறும்புகளிலும் மாத்திரமல்லக் குரங்குகளிலும் தேனீகளிலும் மற்றும் பலவித மிருகங்களிலும் உண்டென்பதற்கு நியாயமுண்டு.

இப்படிக்கு, R. A.

## பிசுனன்.

பிராஞ்சுதேசத்தில் ஒரு பிசுனன் இருந்தான் அவன் வசித்த பட்டினம் மார்சேல் (Marseilles) எனப்படும். இவனுக்கு கிசோ (Guizot என்றுபேர். அவன் எப்பொழுதும் வேலைசெய்து பணந்தேடுவான். வறியவன்போற் காணப்படும்படி கந்தைத்துணிகளை உடுப்பான். இவன் சாப்பாடு கடைப்படியான சாப்பாட்டிலும் அதிககேடாகவிருக்கும். மலிந்த பண்டங்களையே வாங்கிச் சாப்பிடுவான். தனியே குடியிருந்து தன் சரீரத்துக்கு அவசரம்வேண்டிய சலாக்கியமெல்லாவற்றையும் வெறுத்தான். ஆனால் காணயமுள்ளவனும் எவனும் நம்பக்கூடியவனுமாகவிருந்தான். தன்னுடையதல்லாததை ஒருபொழுதும் தனதென்று அபகரியான். தன் வாக்குத்தத்தங்களை எப்பொழுதும் நிறைவேற்றுவான். அப்பட்டினத்தாரெல்லாரும் அவனைக் கயவஞ்சியென்பார்கள். மெத்த இகழ்ச்சியாகப் பேசுவார்கள். அவனைத் தெருக்களில் ஐசுவரியவான்கள்கண்டால் நிந்திப்பார்கள். பிச்சைக்காரர் சீறி உறுமுவார்கள். பிள்ளைகள் கல்நெஞ்சன் மாபிசுனிபோகிறனென்பார்கள்.

ஆனால் கிசோ என்பவர் சகலநிந்தைகளையும் இகழ்ச்சிகளையும் அமைதியுடன் தாங்கிக்கொண்டார். ஒவ்வொருநாளும் தன் வேலைக்குப் போவார். ஒவ்வொருநாளும் சனங்கள் எல்லாருஞ் சீறி உறுமி நிந்திப்பார்கள். இப்படிப் பலநாட்கள் சென்றதின்பின் வயதும் ௮௰ ஆனது. இன்னும் தனது முயற்சியிற் குறைவற்றவராகவிருந்தார். வயதுபோயும் நற்பண்டங்களைத் தின்றதில்லை. தான் முன் சாப்பிட்டபடி சாப்பிட்டு உடுத்துநடத்துவார். அவர் இரட்டைமடிப்புள்ளவராகக் கூனினார். அவர் தலை பஞ்சுப்பெட்டிபோல நரைத்தது. அவர் தெருக்களிற் செல்லும்பொழுது முழந்தாட்கள் ஒன்றோடொன்று மோதி அடிக்கும். அவர் போகும் இடமெல்லாம் பகிடியும் கொன்னையுங் கேலியும் பலவிதச்சரசமும்பண்ணுவார்கள்.

ஈற்றில் இந்த மனுஷன் மரித்தான். வெள்ளியும் பொன்னுமாக ௪ இலட்சம் ரூபாய் தேடிவைத்தான். அவன் எழுத்துப்பெட்டியைத்தேடி ஆராய்ந்தபொழுது அவன் எழுதிவைத்த மரணசாதனங் காணப்பட்டது. என்னவெனில் நான் ஒருகாலத் தரித்திரனாகவிருந்தேன். மார்சேல் பட்டினத்தார் சுத்தநல்ல தண்ணீர்கிடையாமல் அவதிப்பட்டிருந்தார்கள். ஆகையால் தரித்திரர் சுத்தநல்ல சலத்தைப்பெறும்படி ஒரு சலதாரையைக்கட்டப் போதியபணத்தை என் சீவியகாலத்தில் தேடி வைத்திருக்கிறதென்று எழுதிவைத்தான்.

பிள்ளைகளே ஒருவன் தன்னை ஒறுத்து நடப்பதினால் அவன் நோக்கத்தை அறியாமல் கேலி பண்ணப்படாது. இவ்வூரிலிப்படிப்பட்டவர்களைக் காண்பது அரிது. நல்நோக்கங்களுக்குக் கொடாததினால் அவனைக் கெட்டவனென்று சொல்லப்படாது. முடிவுமட்டும் பொறுமையுடன் பார்த்து தீர்ப்புப்பண்ணுங்கள்.

## இரகசியம்.

பத்துவயதுள்ள ஒரு பெண்பிள்ளை தன்மாதாவைப்பார்த்து தாயே, ஒவ்வொரு காலமையும் பொழுதுபடவும் தனித்திருக்கும்படி நீர் போகிறகாரியம் என்னவென்று வினவினாள். ஏன் அப்படிக் கேட்கிறாயென்ன, நீர் அதகமாக நேசிக்கும் ஒருவரைக் காணப்போகிறீரென்று நினைக்கிறேனென்றாள். பிள்ளையே, அப்படி நினைப்பதற்குக் காரணமென்னவென்க, நீர் தனியேபோயிருந்து திரும்பி வரும்பொழுது மற்றும்வேளைகளிலும் அதிகமனச்சந்தோஷமுள்ளவராயிருக்கிறீரென்றாள். நல்லது நான் அதிகமாக நேசிக்கிற ஒருவரைக்கண்டு சம்பாஷித்து திரும்பிவருகையில் நானுமெத்தச சந்தோஷமுள்ளவளாக விருப்பதற்கு அப்படி விரும்புகிறேனென்று பின்னை சொன்னாள்.

நல்லது பிள்ளையே, அந்திசந்தி உன்னைவிட்டுப் போகும்பொழுது என் இரட்சகருடன் கூடவிருக்கப்போகிறேன். அவரிடத்திற் பிரார்த்திக்கப்போகிறேன. அவர் தமது கிருபையை எனக்கு ஈய்ந்து என்னைப் பரிசுத்தமுஞ் சந்தோஷமுமுள்ளவளாக் நம்படி கேட்கிறேன். என் முழுநாளின் வேலைகளில் உதவிசெய்யக் கேட்கிறேன். பிரதானமாகப் பாவத்திற்கு விலக்கும்படி கேட்கிறேன். இன்னுந் தேவன் உன்பேரிற் கிருபைகூரவும் அவருக்கு விரோதமாக நீ பாவஞ்செய்யாமல் உன்னைக் காப்பாற்றவுங் கேட்கிறேன் என்று தாய் சொல்ல, இதுவோ உனது இரகசியம், அப்படியாகில் நானுங் கூட வரவேண்டுமென்று பிள்ளை சொன்னாள்.

பிள்ளைகளுக்கும் பெற்றாருக்குமிது நற்சரித்திரம். நீங்கள் பிரார்த்திப்பதையும் சந்தோஷமாயிருப்பதையும் உங்கள் பிள்ளைகள் காணட்டும். செபம்பண்ணுவது சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்குகிறதென்று அவர்கள் உணரும்படி செய்யுங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றாருடன் கூடிப் பிரார்த்தனைக்குப்போங்கள். அது உங்களுக்கு நன்மையாக முடியும்.

செபம்பண்ணுவோருக்கு வருஞ் சந்தோஷத்தைப்பற்றி அனுபவத்தினாலன்றிப் பின்னொருவழியினாலும் அறியமாட்டீர்கள். உங்கள் பெற்றார் சஞ்சலமுள்ளவர்களாகவிருக்கையில் தேவனிடத்திற் போய் திரும்பிவருகையில் அவர்கள் முகஞ் சந்தோஷமும் பிரகாசமுமுள்ளதாக விருக்கும். மனக்கிலேசமுள்ளவர்களாக நீங்களுமிருந்தால் தேவனிடத்திற்சென்று உங்கள் கிலேசங்களை நீக்குங்கள்.

---

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.